Q.C. 040

DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

Name of the Test:

Departmental Test for Officers of the Cooperative Department - Book - Keeping (Without Books)	057

Maximum Time: One Hour

Maximum Marks: 40

IMPORTANT INSTRUCTIONS

OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

Read the following instructions carefully before beginning to answer the questions.

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 40 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 40 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

a) One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

b) Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Opening statement of affairs is usually prepared to find out the
தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது

(A) Loss occurred during the year
அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

(B) Capital at the end of the year
இறுதி முதல் கண்டறிய

(C) Capital in the beginning of the year
தொடக்க முதல் கண்டறிய

(D) Profit made during the year
அவ்வாண்டின் இலாபம் கண்டறிய

2. The amount of credit sales can be computed from
கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது?

(A) Total debtors account
மொத்த கடனாளிகள் கணக்கு

(B) Total creditors account
மொத்த கடனீந்தோர் கணக்கு

(C) Bills receivable account
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

(D) Bills payable account
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

3. Receipts and payments account is a
பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு

(A) Nominal a/c
பெயரளவு கணக்கு

(B) Personal a/c
ஆள்சார் கணக்கு

(C) Real a/c
சொத்து கணக்கு

(D) Representative personal account
பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

4. Financial position of a business is ascertained on the basis of
ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது

(A) Balance sheet
இருப்பு நிலைக் குறிப்பு

(B) Ledger
பேரேடு

(C) Trial balance
இருப்பாய்வு

(D) Journal
குறிப்பேடு

5. The concept which assumes that a business will last indefinitely is
வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

(A) Business entity
வணிக தனித்தன்மை கருத்து

(B) Going concern
நிறுவன தொடர்ச்சி கருத்து

(C) Periodicity
கணக்கியல் கால அனுமானம்

(D) Conservatism
முன்னெச்சரிக்கை எண்ணிக்கை

6. Which one of the following is not a main objective of accounting?
பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது

(A) Systematic recording of transactions
நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்

(B) Solving tax disputes with tax authorities
விரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

(C) Ascertainment of the profitability of the business
வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்

(D) Ascertainment of the financial position of the business
நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்

7. Cash withdrawn by the proprietor from the business for his personal use causes
சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகையால் ஏற்படும் நிலை

(A) Decrease in assets and decrease in owner's capital
சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்

(B) Increase in one assets and decrease in another asset
ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தி மதிப்பு குறையும்

(C) Increase in one assets and increase in liabilities
ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்

(D) Increase in assets and decrease in capital
சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்

8. Accounting equation is formed based on the accounting principle of
கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

(A) Accrual
நிகழ்வுத் தன்மை

(B) Going concern
நிறுவனத் தொடர்ச்சி

(C) Consistency
நிலைத் தன்மை

(D) Dual aspect
இரட்டைத் தன்மை

9. Withdrawal of cash from business by the proprietor should be credited to
உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

(A) Drawings A/c
எடுப்புகள் கணக்குகள்

(B) Cash A/c
ரொக்கக் கணக்கு

(C) Capital A/c
முதல் கணக்கு

(D) Purchase A/c
கொள்முதல் கணக்கு

10. Real accounts deals with
சொத்து கணக்கு கையாள்வது

(A) Assets
சொத்துகள்

(B) Individual persons
தனிப்பட்ட நபர்கள்

(C) Expenses and loss
செலவுகள் மற்றும் இழப்புகள்

(D) Income and gains
வருமானம் மற்றும் இலாபங்கள்

11. A firm has assets of Rs.5,00,000 and the external liabilities of Rs.2,00,000. Its capital would be
ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 5,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ. 2,00,000 எனில், அந்நிறுவனத்தில் முதல்

(A) Rs. 7,00,000
ரூ. 7,00,000

(B) Rs. 3,00,000
ரூ. 3,00,000

(C) Rs. 5,00,000
ரூ. 5,00,000

(D) Rs. 2,00,000
ரூ. 2,00,000

12. J.F. means
J.F. என்பது

(A) Journal page number
குறிப்பேட்டு பக்க எண்

(B) Journal Paper Number
குறிப்பேட்டு தாள் எண்

(C) Journal Final Number
குறிப்பேட்டு இறுதி எண்

(D) Journal Voucher Number
குறிப்பேட்டு சான்று சீட்டு எண்

13. The process of finding the net amount from the totals of debit and credit columns in a ledger is known as
ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம்

(A) Casting
கட்டுதல்

(B) Posting
எடுத்தெழுதுதல்

(C) Journalising
குறிப்பேட்டில் பதிதல்

(D) Balancing
இருப்புக் கட்டுதல்

14. Trial balance is a
இருப்பாய்வு என்பது ஒரு

(A) Journal
குறிப்பேடு

(B) Statement
அறிக்கை

(C) Account
கணக்கு

(D) Ledger
பேரேடு

15. Trial balance is prepared
இருப்பாய்வு தயாரிக்கப்படுவது

(A) For a year
ஒரு பருவ காலம் முடிந்ததும்

(B) At the end of the year
ஆண்டு இறுதியில்

(C) On a particular date
ஒரு குறிப்பிட்ட நாளில்

(D) On a particular week
ஒரு குறிப்பிட்ட வாரத்தில்

16. The account which has a debit balance and is shown in the debit column of the trial balance is
கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கு பற்று நிலுவையுடன் பற்று நிலுவையுடன் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்?

(A) Sundry creditors account
பற்பல கடனீந்தோர் கணக்கு

(B) Bills payable account
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

(C) Drawings account
எடுப்புகள் கணக்குகள்

(D) Capital accounts
முதல் கணக்கு

17. Purchases book is used to record
கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது

(A) All purchases of goods
அனைத்து சரக்குகளின் கொள்முதல்

(B) All credit purchases of assets
அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்

(C) All credit purchases of goods
அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்

(D) All purchases of assets
அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

18. Sales book is used to record
விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?

(A) All sales of assets and goods
அனைத்து சொத்துகள் மற்றும் சரக்குகளின் விற்பனை

(B) All sales of goods
அனைத்து சரக்குகளின் விற்பனை

(C) All credit sales of goods
அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

(D) All credit sales of assets
அனைத்து சொத்துகளின் கடன் விற்பனை

19. Purchases of fixed assets on credit basis is recorded in
நிலைச்சொத்துகள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு

(A) Purchases book
கொள்முதல் ஏடு

(B) Sales book
விற்பனை ஏடு

(C) Purchases returns book
கொள்முதல் திருப்ப ஏடு

(D) Journal proper
உரிய குறிப்பேடு

20. Closing entries are recorded in
இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்

(A) Journal proper
உரிய குறிப்பேடு

(B) Ledger
பேரேடு

(C) Cash book
ரொக்க ஏடு

(D) Purchases book
கொள்முதல் ஏடு

21. A cash book with discount, cash and bank column is called
தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்

(A) Simple cash book
சாதாரண ரொக்க ஏடு

(B) Double column cash book
இருபத்தி ரொக்க ஏடு

(C) Three column cash book
முப்பத்தி ரொக்க ஏடு

(D) Petty cash book
சில்லறை ரொக்க ஏடு

22. Petty cash may be used to pay
எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?

(A) Purchases of raw materials
மூலப் பொருட்கள் வாங்க

(B) The expenses relating to postage and conveyance
தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள்

(C) Purchase of furniture and fixtures
அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க

(D) Salary to the manager
மேலாளரின் ஊதியம்

23. If the debt and credit aspects of a transaction are recorded in the cash book, it is
ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது

(A) Contra entry
எதிர்ப்பதிவு

(B) Compound entry
கூட்டுப்பதிவு

(C) Single entry
ஒற்றைப் பதிவு

(D) Simple entry
சாதாரணப் பதிவு

24. A bank statement is a copy of
வங்கி அறிக்கை என்பது

(A) Cheque issued by the business
வணிகத்தால் வழங்கப்பட்ட காசோலைகளின் நகல்

(B) Bank column of the cash book
ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்

(C) A customer's account in the bank's book
வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

(D) Cash column of the cash book
ரொக்க ஏட்டின் ரொக்கம் பத்தியின் நகல்

25. Which one of the following is not a timing difference?
பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?

(A) Cheque deposited but not yet credited
செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது

(B) Cheque issued but not yet presented for payment
விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படாதது

(C) Amount directly paid into the bank
வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை

(D) Wrong debit in the cash book
ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

26. The cash book records
ரொக்க ஏடு பதிவு செய்வது

(A) All cash receipts
அனைத்து ரொக்கப் பெறுதல்கள்

(B) All cash payments
அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) All credit transactions
அனைத்து கடன் நடவடிக்கைகள்

27. Cash book is a
ரொக்க ஏடு ஒரு

(A) Principal book
முதன்மை ஏடு

(B) Subsidiary book
துணை ஏடு

(C) Journal proper
உரிய குறிப்பேடு

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

28. Errors not affecting the agreement of trial balance are
இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்

(A) Errors of principle
கொள்கை பிழைகள்

(B) Errors of overcasting
அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்

(C) Errors of undercasting
குறைவாகக் கூட்டுதல் பிழைகள்

(D) Errors of partial omission
பகுதி விடு பிழைகள்

29. A transaction not recorded at all is known as an error
ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவு செய்யப்படாத போது அது ———— எனப்படும்.

(A) Principle
கொள்கை பிழை

(B) Complete omission
முழுவிடு பிழை

(C) Partial omission
பகுதி விடு பிழை

(D) Duplication
இருமுறை பதிந்த பிழை

30. The total of purchases book was overcast. Which of the following accounts should be debited in the rectifying journal entry?
கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்ய கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?

(A) Purchases account
கொள்முதல் கணக்கு

(B) Suspense account
அனாமத்துக் கணக்கு

(C) Creditor account
கடனீந்தோர் கணக்கு

(D) None of the above
மேற்கண்ட ஏதும் இல்லை

31. Depreciation is caused by
தேய்மானம் எதனால் ஏற்படுகிறது

(A) Lapse of time
காலப்போக்கு

(B) Usage
பயன்பாடு

(C) Obsolescence
வழக்கொழிவு

(D) (A), (B), (C) - All
(A), (B), (C) - ஆகியன

32. A depreciation asset may suffer obsolescence due to
ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?

(A) Passage of time
காலப்போக்கு

(B) Wear and tear
தேய்வு மற்றும் உராய்வு

(C) Technological changes
தொழில்நுட்ப மாற்றங்கள்

(D) None of the above
மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

33. Depreciation is to be calculated from the date when
எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்

(A) Asset is put to use
சொத்தினை பயன்படுத்த தொடங்கிய நாள்முதல்

(B) Purchase order is made
சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள்முதல்

(C) Asset is received at business premises
சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்

(D) Invoice of assets is received
சொத்தின் இடாப்பு பெற்ற நாள்முதல்

34. Residual value of an asset means the amount that it can fetch on sale at the __________ of its useful life.
சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ———— அச்சொத்தினை விற்பனை செய்வதால் கிடைக்கும் தொகையாகும்.

(A) Beginning
ஆரம்பத்தில்

(B) End
இறுதியில்

(C) Middle
மத்தியில்

(D) None
இவைகளில் ஏதுமில்லை

35. Revenue expenditure is intended to benefit
வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது

(A) Any period
அனைத்து காலத்திற்கும்

(B) Future period
எதிர் காலத்திற்கு

(C) Past period
கடந்த காலத்திற்கு

(D) Current period
நடப்பு காலத்திற்கு

36. Interest on bank deposits is
வங்கி வைப்புகள் மீதான வட்டி என்பது

(A) Capital receipt
முதலின வரவு

(B) Revenue receipt
வருவாயின வரவு

(C) Capital expenditures
முதலினச் செலவு

(D) Revenue expenditures
வருவாயின செலவு

37. Pre-operative expense are
வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்

(A) Revenue expenditure
வருவாயினச் செலவுகள்

(B) Prepaid revenue expenditure
முன் கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்

(C) Deferred revenue expenditure
நீள்பயன் வருவாயினச் செலவுகள்

(D) Capital expenditure
முதலினச் செலவுகள்

38. Balance sheet is
இருப்புநிலைக் குறிப்பு என்பது

(A) A statement
ஓர் அறிக்கை

(B) An account
ஓர் கணக்கு

(C) Neither a statement nor an account
ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

39. Current assets does not include
பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது ?

(A) Cash
ரொக்கம்

(B) Stock
சரக்கிருப்பு

(C) Furniture
அறைகலன்

(D) Prepaid expense
முன்கூட்டிச் செலுத்திய செலவு

40. Balance sheet shows the __________ of the business
இருப்பு நிலைக் குறிப்பு வணிகத்தின் ———— காண்பிக்கிறது.

(A) Financial position
நிதி நிலையினை

(B) Profitability
இலாபத்தினை

(C) Sales
விற்பனையை

(D) Purchases
கொள்முதலை

040/DM/25

Register Number									

DEPARTMENTAL EXAMINATIONS
DEPARTMENTAL TEST FOR OFFICERS OF THE CO-OPERATIVE DEPARTMENT – BOOK KEEPING

(Without Books)

Maximum Time : 1:30 hours — Maximum Marks : 60

IMPORTANT INSTRUCTIONS

DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

Read the following instructions carefully before beginning to answer the questions.

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

I. Answer any EIGHT questions only. (8 × 3 = 24)

எவையேனும் எட்டு கேள்விகளுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. List any two functions of accounting.

   கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.

2. What is “Full Disclosure Principle” of accounting?

   கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?

[Turn over

3. How journal entries will be passed in case of Bad debts?

தவணைத் தவறிய கடன்களுக்கான குறிப்பேட்டு பதிவு எவ்வாறு பதிவிடப்படுகிறது?

4. What is meant by Posting?

எடுத்தெழுதல் என்றால் என்ன?

5. Define bill of exchange.

மாற்றுச் சீட்டின் வரைவிலக்கணம் தருக.

6. What is an invoice?

இடாப்பு என்றால் என்ன?

7. What is meant by the term "cheque not yet presented"?

'காசோலை இன்னும் முன்னிலைப்படுத்தவில்லை' என்பதன் பொருள் என்ன?

8. Write the advantages of maintaining petty cash book.

சில்லறை ரொக்க ஏடு பராமரிப்பதால் உண்டாகும் நன்மைகளை எழுதுக.

9. What is cash discount?

ரொக்க தள்ளுபடி என்றால் என்ன?

10. Write short note on trading account.

வியாபாரக் கணக்கு பற்றி குறிப்பெழுதுக.

II. Answer any THREE questions. **($3 \times 5 = 15$)**

எவையேனும் மூன்று கேள்விகளுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. What is Ledger? Give ruling of the ledger account?

பேரேடு என்றால் என்ன? பேரேட்டு கணக்கின் வழிமுறையை தருக.

2. Describe the features of Capital and Revenue expenditure.

மூலதன செலவினம் மற்றும் வருவாய்சார் செலவினத்தின் இயல்புகளை விவரி.

3. Write the advantages of double entry system.

இரட்டைப் பதிவு முறையின் நன்மைகளை எழுதுங்கள்.

4. Write short note on

   (a) Debit note

   (b) Credit note

   சிறு குறிப்பு வரைக.

   (அ) பற்றுக் குறிப்பு

   (ஆ) வரவு குறிப்பு

5. What is three columnar cash book? what are the main features of three columnar cash book?

   முப்பத்தி பேரேடு என்றால் என்ன? முப்பத்தி பேரேட்டின் சிறப்பம்சங்கள் யாவை?

III. Answer any THREE questions. **(3 × 7 = 21)**

எவையேனும் மூன்று கேள்விகளுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. Write the features of Computerised accounting system.

   கணினிமயமாக்கப்பட்ட கணக்கியல் அமைப்பின் அம்சங்களை எழுதுங்கள்.

2. What are the difference between a trial balance and a balance sheet?

   இருப்பாய்வு பட்டியலுக்கும் இருப்பு நிலைக் குறிப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

3. What are the Methods of calculating depreciation?

   தேய்மான கணக்கீட்டு முறைகள் யாவை?

4. Explain the Bank Reconciliation statement? Briefly explain the reasons for the difference between balance shown in the cash book and Bank statement.

   வங்கி சரிகட்டும் பதிவு என்றால் என்ன? ரொக்கப் பேரேட்டிற்கும் வங்கி அறிக்கைக்கும் வித்தியாசம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

5. What are the books maintained by the Primary consumer co–operative stores.

   தொடக்க நிலை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் பராமரிக்கப்படும் புத்தகங்கள் யாவை?